வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
**தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016**
**Term Examination, November - 2016**

FWC

| தரம் :- 13 (2017) | அரசியல் விஞ்ஞானம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் புள்ளடி (×) இடுக.**

➢ **சரியான கூற்றினைத் தெரிவு செய்க.**

01) "மனிதனது சமூக நடத்தைகள் பல்வேறு நோக்குகளில் சமூக விஞ்ஞானங்களினூடாகக் கற்கப்படுகிறது" அரசியல் விஞ்ஞானத்தினூடாகக் கற்கப்படுவது யாதெனில்,
(1) மனித நடத்தைகள் தொடர்பானதாகும்.
(2) சர்வதேச சமூகங்கள் தொடர்பானதாகும்.
(3) மனித அரசியல் நடத்தை, அரசியற் செயற்பாடுகள் தொடர்பானதாகும்.
(4) மானிட பரம்பரைக் கதை தொடர்பானதாகும்.
(5) சமூக, பொருளாதார, பண்பாட்டுடன் தொடர்பானதாகும்.

02) அரசியல் என்பது
(1) நல்லவை, தீயவைகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் கற்றலோடு இணைந்த பொதுச் செயற்பாடாகும்.
(2) அரசாங்கத்தினதும் அரசினது செயற்பாடுகளோடும் இணைந்த செயன்முறை பற்றிய கலையாகும்.
(3) வன்செயல்களினூடாக பேச்சுவார்த்தைகளின்றி மோதல்களைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாகும்.
(4) பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களிடையே நடைபெறும் அதிகாரப் போராட்டமாகும்.
(5) சமய ஆன்மீகக் கோட்பாடுகளை வலியுறுத்தி மக்களை இறையியலோடு இணைக்கும் முறையாகும்.

03) நடத்தை வாதமானது
(1) மக்களின் அரசியல் நடத்தைப் பாங்கோடு தொடர்பான நியதிகளை உருவாக்க முயலுகின்றது.
(2) கற்பனை வாதத்துடன் தொடர்புபட்டதாகும்.
(3) மிகத் தொன்மையான வாதமாகும்.
(4) சமூக நிறுவனங்களையும் மனிதனையும் ஆய்வுக்குட்படுத்துகிறது.
(5) பண்புசார் பகுப்பாய்வு முறையாகப் பயன்படுகின்றது.

04) தாராண்மைவாத ஜனநாயக அரசுகள் சிறப்பாகச் செயற்பட அவசியமான அம்சங்களில் பொருத்தமற்றது.
(1) கட்சிகளின் செயற்பாடுகள்
(2) பொதுசன அபிப்பிராயம்
(3) வரையறுக்கப்பட்ட ஊடகச் சுதந்திரம்
(4) சட்டத்தின் ஆட்சி
(5) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்

05) அரசாங்கம் என்பதுடன் தொடர்பற்ற கூற்று
(1) ஸ்பரிசிக்கக்கூடியதும் புலனிடானதுமாகும்.
(2) சமூகத்தின் பொதுச் சித்தத்தினைப் பிரதிநிதித்துவப்படு முகவராகும்.
(3) சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றைக் கொண்ட நிறுவனமாகும்.
(4) நிரந்தரமற்றதும் காலரீதியான மாற்றத்துக்குட்படுவதுமாகும்.
(5) அரச அதிகாரத்தை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தும் கருவியாகும்.

06) மொண்டீ வீடியோ (MONTE VIDEO CONVENTION) ஒப்பந்தத்தின் பெறுபேறு
(1) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ரீதியான ஏற்பாடு
(2) அரசு என அரசியல் அலகை இனங்காணும் சர்வதேச ஒருமைப்பாடு
(3) தேசிய அரசுகளுக்கான சட்ட அந்தஸ்து
(4) ஜனநாயக அரசுகளுக்கான கோட்பாட்டு ரீதியான அடிப்படை
(5) அனைத்து மாதிரி அரசுகளிலும் நிலவுகைக்கான அரசாங்கங்களின் ஒருமைப்பாடு

07) அமுக்கக் குழுக்கள் தொடர்பான பிழையான கூற்று எது?
(1) கொள்கை உருவாக்கத்தின் போது அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுத்தல்
(2) அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கமின்றிச் செயற்படுதல்
(3) ஜனநாயக அரசியல் வளர்ச்சியின் ஒரு அளவு கோலாகச் செயற்படுதல்
(4) தனிப்பட்ட நலன்களுக்காக ஒழுங்கமைந்திருத்தல்
(5) பொதுச் சமூக நலன்களை ஒன்று திரட்டுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருத்தல்

08) இறைமை அதிகாரம் என்பது
(1) அரசின் அதிகாரமாகும்.
(2) மக்களின் அதிகாரமாகும்.
(3) கடவுளின் அதிகாரமாகும்.
(4) அரசாங்கத்தின் அதிகாரமாகும்.
(5) சிவில் சமூகத்தின் அதிகாரமாகும்.

09) பொதுத்துறைக் கொள்கை என்பது
(1) தனிப்பட்ட அரசாங்க உறுப்பினர்களின் கொள்கைகளாகும்.
(2) தனியார்துறை முயற்சிகளின் கொள்கைகளாகும்.
(3) அரசசார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகளாகும்.
(4) மக்களின் பொதுநன்மைக்களுக்காக அரசினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளாகும்.
(5) அரசியற் கட்சிகளின் கொள்கைகளாகும்.

10) அரசியற் கட்சிகளின் பணிகளுள் அடங்காத விடயமானது
(1) அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கத்தில் நேரடியாகப் பங்குகொள்ளுதல்
(2) அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போராடுதல்
(3) வாக்காளருக்கு அரசியல் அறிவூட்டுதல்
(4) ஒரே அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களை ஒரே அணியில் திரட்டுதல்
(5) சமூக பலத்தை அதிகார பலமாக மாற்றிக் கொள்ளுதல்

11) அதிகார வேறாக்கம் பயன்படுவது
(1) சிவில் சேவையினதும் பொலிசினதும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(2) சட்டத்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(3) நிறைவேற்றத்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(4) அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(5) நீதித்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.

12) தாராள ஜனநாயக அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகளில் அடங்காதது

(1) ஆட்சியாளர்கள் பொதுமக்களுக்குப் பொறுப்புக் கூறுதல்.

(2) நியாயமாக நடைபெறும் தேர்தல்கள் மூலம் மக்கள் தமது ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தல்.

(3) அரசியல் யாப்பினை ஆதாரமாகக் கொண்டு அரசாங்கத்தின் செயற்பாடுகள் நடைபெறுதல்.

(4) சட்ட, நிறைவேற்றுத் துறைகளுக்கு மேலால் நீதித்துறையின் ஆதிக்கம் காணப்படுதல்.

(5) அரசாங்கத்தின் முத்துறை அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருத்தல்.

13) அனைத்தாண்மை அரசாங்கத்தின் பண்புகளுள் அடங்காதது

(1) சுயமாக நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்

(2) ஆட்சியாளர் பொறுப்புக் கூறாமை

(3) சட்டத்துக்குக் கீழ்ப்படியாத தன்னிகரற்ற ஆட்சி

(4) ஆளப்படுவோர்மீது அரச அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு வன்முறையினைப் பிரயோகித்தல்

(5) நிச்சயமான பொருளாதார, அரசியல் கருத்தியல்களின் அடிப்படையில் ஆட்சி அமைந்திருத்தல்

- **14 - 29 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

14) மந்திரிசபை அரசாங்க முறை என்பது

A - நாம மற்றும் உண்மை என்ற இருநிறைவேற்றுப் பகுதிகளைக் கொண்டதாகும்.

B - கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்ற இரு மூலக்கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும்.

C - வெற்றிகரமான செயற்பாட்டுக்கு அரசியல் ஒருமைத் தன்மையை வேண்டுகிறது.

D - அரசாங்கத்தினுள் மந்திரி சபையின் சர்வாதிகாரம் தோன்றும் போக்கினைக் காட்டி நிற்கின்றது.

E - சிறப்பாக ஒழுங்கமைந்த இருகட்சி முறையின் கீழ் வெற்றிகரமாகச் செயற்படும்.

(1) CBED (2) BAED (3) ACDE (4) BACE (5) ABCE

15) ஜனாதிபதி அரசாங்க முறை என்பது

A - மந்திரிசபை முறையைவிட அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை உத்தரவாதப்படுத்தும்.

B - அரசியல் கட்சிகளின் செல்வாக்குச் செலுத்தலைக் குறைக்கும்

C - சமூகப் பல்தன்மையுடைய நாடுகளுக்கு மிகவும் பொருந்தும்

D - ஜனநாயக ஆட்சியை ஓரளவு பலவீனப்படுத்தும்.

E - வலுவேறாக்கத்தின் அடிப்படையில் செயற்படும்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

16) ஒற்றையாட்சி முறையின் பிரதான பண்புகளாவன

A - ஒரு தனி மத்திய அரசாங்கத்தில் இறைமை அதிகாரம் செறிந்திருத்தல்

B - இரட்டைக் குடியுரிமை

C - ஒற்றை நிர்வாக மற்றும் நீதி முறைமை

D - தனித்த அரசியலமைப்பு

E - மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்கள்

(1) ABCE (2) ABDE (3) BCDE (4) ABCD (5) ACDE

17) சமஷ்டி முறையின் அடிப்படைகளாவன

A - பலவீனமான மத்திய அரசாங்கம் மற்றும் பலமான சமஷ்டி அலகுகள்

B - அதிகாரப் பங்கீடு

C - எழுதப்பட்ட நெகிழா யாப்பு

D - அரசியலமைப்பின் பாதுகாவலனாகச் செயற்படும் சுதந்திரமான நீதித்துறை

E - சமஷ்டி அலகுகள் சமமாக கணிக்கப்படுதல்

(1) CBED (2) BAED (3) ACDE (4) BACE (5) ABCE

18) முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன

A - தனியார் சொத்துடைமையை அங்கீகரித்தல்

B - சுதந்திரமான முயற்சியை அங்கீகரித்தல்

C - சிறந்த சந்தை முறையினை அங்கீகரித்தல்

D - பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் குறைந்த பட்சத் தலையீடு

E - அரசாங்கம் எதனையும் செய்யாது தனியார் துறையே சகலதையும் செய்யவேண்டும் என்ற கோட்பாட்டை அங்கீகரித்தல்

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) ABCD (5) ABEC

19) சோசலிஷ அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன

A - ஒரு கட்சியின் ஆதிக்கம் நிலவுதல்

B - தனியார் சொத்துடைமை நிராகரிக்கப்படுதல்

C - உற்பத்தி, பங்கீடு, பரிமாற்றம் என்பவற்றில் அரசாங்கத்தின் ஆதிக்கநிலை காணப்படுதல்

D - மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்

E - ஜனநாயக மூலக்கொள்கைகளின் அடிப்படையிலமைந்த அரசாங்கக் கட்டமைப்புக்கள் காணப்படுதல்

(1) BADC (2) CBDE (3) BAED (4) CADE (5) ECBA

20) ஜனநாயக அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன

A - ஊடக, நீதித்துறையின் சுதந்திரம்

B - மக்கள் கருத்தறியும், கருத்துக்கூறும் சுதந்திரம்

C - சட்டத்தின் ஆட்சி

D - காலத்துக்குக் காலம் நடைபெறும் நீதியான தேர்தல்கள்

E - சகலரும் சமமானவர்கள் ஆனால் சிலர் ஏனையோரைவிட அதிகம் சமமானவர்கள் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுதல்

(1) CBED (2) BACD (3) ACBE (4) ACED (5) CEBA

21) சட்டத்தின் மூலாதாரங்கள்

A - சட்டசபை

B - மரபுகள்

C - சட்ட வல்லுநர்களின் கருத்துக்கள்

D - கலாசாரம்

E - நீதிமன்றத் தீர்ப்புக்கள்

(1) ABCE (2) ABCD (3) BCDE (4) AEDC (5) DEAB

22) பொதுத்துறை நிர்வாகங்கள்

A - அரசாங்கத்தின் செயற்பாட்டுப் பகுதியாகும்.

B - அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பகுதியாகும்.

C - அரசாங்கத்தின் நிர்வாகத்தில் மட்டும் கவனம் செலுத்துகிறது.

D - தனியார்துறை நிர்வாகத்தின் ஒரு பகுதியாகும்.

E - அரசியல் தலையீடுகளிலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

(1) ABCD (2) BCDE (3) AECD (4) ABCE (5) DEAB

23) பொதுக்கொள்கையானது

A - விஷேட குறிக்கோள்களை அடைவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

B - பொதுப்பிரச்சினைகளைத் தீர்ப்பதனை இலக்காகக் கொண்டவையாகும்.

C - ஒரு அரசியல் முறைமையின் பிரதான வெளியீடு ஆகும்.

D - மனித வாழ்க்கையில் பலவகைகளில் பாதிப்பினை ஏற்படுத்த வல்லன.

E - அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள் இதில் செல்வாக்குச் செலுத்துவது இல்லை.

(1) ABCE (2) ABDE (3) ACDE (4) ABCD (5) BCDE

24) சர்வதேச அரசியல் என்பது

A - சர்வதேச சமூகத்தில் அரசுகளால் மேற்கொள்ளப்படும் அதிகாரப் போராட்டமாகும்.

B - அரசுகளின் தேசிய நலன்களை விருத்தி செய்வதையும் பாதுகாப்பையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

C - வாக்குகளினால் அன்றி துப்பாக்கி ரவைகளினால் மேற்கொள்ளப்படும் போராட்டமாகும்.

D - வல்லரசுகளுக்கிடையில் நிலவும் அதிகாரப் போராட்டமாகும்.

E - அரசாங்கமற்ற அரசியல் எனவும் அழைக்கப்படுகிறது.

(1) ABCE (2) ACDE (3) ABDE (4) BCDE (5) ABCD

25) நேரடி ஜனநாயக நுட்பங்கள் என்பது

A - வாக்காளர்களின் நேரடியான தீர்மானங்களுக்கு முக்கியமளிக்கின்றது.

B - குடிமுனைப்பானது மக்கள் இறைமையை அர்த்தமுள்ளதாக்குகின்றது.

C - ஆரம்ப மக்கள் சபை முறை கிரேக்கத்தில் காணப்பட்டது.

D - சுவிஸ்லாந்தில் இம்முறைகள் சிறப்பாக செயற்படுகின்றன.

E - தற்கால ஜனநாயக நாடுகள் அனைத்திலும் இம்முறை அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) ABCD (5) ABCE

26) நல்லாட்சி என்பது

A - சமூகநீதி வீழ்ச்சி அடைந்த பின்னணியில் உருவானது.

B - அபிவிருத்தியடைந்துவரும் மூன்றாம் உலக நாடுகளில் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.

C - பொருளாதார உதவி வழங்கும் நிறுவனங்கள் நல்லாட்சியில் அதிக கவனம் செலுத்துகின்றன.

D - மக்கள் பங்கேற்பை அதிகரிக்க வலியுறுத்துகின்றது.

E - நல்லாட்சிக்கான ஒரு நிபந்தனை சட்டத்தின் ஆட்சியாகும்.

(1) ABDE (2) ABCD (3) ACDE (4) BCDE (5) ABCE

27) அரசியல் பிரதிநிதித்துவம் என்பது

A - நவீன சூழ்நிலைகளில் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரே வழிமுறை எனக் கருதப்படுகிறது.

B - ஜனநாயக ஆட்சிமுறைமையின் அர்த்தத்தை வலியுறுத்துவதாகும்.

C - ஜனநாயக ஆட்சியில் அரசாங்கத்தையும் மக்களையும் இணைக்கும் ஓர் ஊடகமாகும்.

D - ஒரு வாக்கு - சமமற்ற பெறுமதிகள் என்ற அடிப்படையில் நடைமுறப்படுத்தப்படுகிறது.

E - ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் சார்பாக ஒரு தனி மனிதன் செயற்படும் விதமாகும்.

(1) ACDE (2) ABCE (3) ABDE (4) BCDE (5) ABCD

28) மனித உரிமைகள் என்பவை

A - கடவுளால் மக்களுக்கு வழங்கப்பட்டவையாகும்.

B - மனிதப் பிறவிகளாக இருப்பதனால் மக்களுக்கு உரித்தாகும் உரிமைகளாகும்.

C - அனைத்துலக ரீதியானவை, அடிப்படையானவை என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

D - சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் நீதிக்குமான அடித்தளம் எனக் கருதப்படுகிறது.

E - மனிதனுக்குச் சிறந்த அரசியல், சிவில் வாழ்வினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையானதாகக் கருதப்படுகிறது.

(1) ABCD (2) ADBE (3) ABCE (4) BCDE (5) ABDE

29) சமூக மோதல் குறித்து நிற்பது

A - நிறுவனத்துக்குள்ளான மோதலை ஆகும்.

B - சமூகக் குழுக்களுக்கிடையிலான மோதலை ஆகும்.

C - தனிநபருக்குள்ளான மோதலை ஆகும்.

D - அரசியல் கட்சிகளுக்குள்ளான மோதலை ஆகும்.

E - அரசாங்கத்துக்குள்ளான மோதலை ஆகும்.

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) ABCE (5) ABCD

➤ **30 - 34 வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுக்களுள் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.**

30) பிரித்தானிய அரசியல் முறையின் முக்கிய பண்புகளாவன

(1) பாரம்பரியங்களுக்கு முதன்மை அளித்தல்

(2) எழுதப்பட்ட நெகிழாத அரசியலமைப்பு

(3) மந்திரிசபை அரசாங்க முறைமை

(4) இருகட்சி முறைமை

(5) இறைமையைக் கொண்ட பாராளுமன்றம்

31) ஐக்கிய அமெரிக்க அரசியல் முறைமையானது

(1) 1787 இல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பினை சமஷ்டி அரசாகும்.

(2) ஐம்பது மாகாண அரசுகளைக் கொண்ட சமஷ்டி அரசாகும்.

(3) மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படுகிறது.

(4) பழம் சமஷ்டி மூலக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமஷ்டி முறையாகும்.

(5) சமஷ்டி அரசாங்கத்துக்கும் மாகாண அரசுகளுக்குமிடையிலான அதிகாரப் பங்கீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

32) சுவிட்சர்லாந்தின் சமஷ்டிச் சட்டத்துறையானது

(1) ஒரு மன்ற முறையாகும்.

(2) மக்கள் அதிகாரத்துக்குட்பட்டு அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் கருவியாகும்.

(3) சகல வகையான சமஷ்டிச் சட்டங்களையும் ஆக்கும் அதிகாரத்தினைப் பெற்றுள்ளது.

(4) நிறைவேற்றுப் பகுதியையும் சமஷ்டி நீதிமன்ற உறுப்பினர்களையும் ஏனைய பிரதான சமஷ்டி அதிகாரிகளையும் இராணுவத் தளபதியையும் நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

(5) சகல சமஷ்டி அதிகாரத் தாபனங்களையும் மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

33) இந்திய உயர்நீதிமன்றமானது

(1) 1950ம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்டது.

(2) பெற்றுள்ள அதிகாரங்களினதும் பணிகளினதும் படி அமெரிக்க உயர்நீதிமன்றத்தைப் பெரும்பாலும் ஒத்துள்ளது.

(3) அரசியல் யாப்பினை விவரணம் செய்யும் அதிகாரத்தைப் பெறவில்லை.

(4) பிரதம நீதியரசரையும் ஏனைய இருபத்தைந்து நீதியரசர்களையும் கொண்டதாகும்.

(5) அரசியல் யாப்பின் பாதுகாவலனாகவும் அடிப்படை உரிமைகளின் பொறுப்பாளராகவும் செயற்படுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

34) 1958ம் ஆண்டு டிகோல் யாப்பின் கீழ் பிரான்சில் ஸ்தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையானது

(1) டிகோல் யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு முக்கிய புதிய அம்சமாகும்.

(2) உத்தியோகபூர்வமாகவும் பெயர் குறிப்பிடப்படுவதன் மூலமும் இடம்பெறும் இருவகையான உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

(3) சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறை உறவுகளின் பாதுகாவலனாகக் கருதப்படுகிறது.

(4) ஜனாதிபதிக்கெதிராகக் கொண்டு வரப்படும் குற்றப் பிரேரனையை விசாரணை செய்கிறது.

(5) ஜனாதிபதித் தேர்தலையும் ஒப்பங்கோடலையும் மேற்பார்வை செய்கிறது.

- **35 - 39 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

35) கோல்புறூக் கமறன் ஆணைக்குழுவினர்

(1) வர்த்தகம் மீதான ஏகபோக உரிமையை இல்லாதொழித்தனர்.

(2) இராசகாரிய முறையை அறிமுகம் செய்வதில் அதிக அக்கறை காட்டினர்.

(3) தேசாதிபதி பிரதம மந்திரியை நியமிக்க வேண்டுமென சிபாரிசு செய்தனர்.

(4) சட்டசபையில் சபாநாயகர் முறைமையை அறிமுகம் செய்தனர்.

(5) உத்தியோக சார்பற்றோர் தொகையில் சுதேசிய உறுப்பினர்கள் தொகையை கணிசமாகக் குறைத்தனர்.

36) குறூமக்கலம் சீர்திருத்தம்

(1) சர்வசன வாக்குரிமையை அறிமுகம் செய்தது.

(2) உத்தியோக சார்புடையோரைவிட உத்தியோக சார்பற்றோரை அதிகரித்தது.

(3) மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை அறிமுகம் செய்தது.

(4) சபாநாயகரைத் தலைவராகக் கொண்ட இருமன்ற முறையைக் கொண்டு வந்தது.

(5) சட்டவாக்கக் கழகத்தின் தேசாதிபதியின் வகிபங்கை வெகுவாகக் குறைத்தது.

37) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய மத்திய தர வகுப்பு

(1) ஏழை மக்களின் நலன்களை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டது.

(2) இனவாரிப் பிரதிநிதித்துவத்தை விரும்பியது.

(3) சுதந்திரம் பெறுவதற்கான ஏற்பாடுகளில் அனைவரையும் ஒன்றிணைக்கப்பாடுபட்டது.

(4) ஆங்கிலேயருக்கு எதிரான போராட்ட உணர்வுகளை மக்களிடையே ஊக்குவித்தது.

(5) 1912 சட்டசபை சீர்திருத்தங்களுக்குக் காரணமாக இருந்தது.

38) இலங்கைத் தேசிய காங்கிரஸ்

(1) அனைத்து மக்களையும் உள்டக்கிய தீவிரவாதத் தன்மை கொண்ட மகாஜன இயக்கமாக செயற்படவில்லை.

(2) ஆள்பதியின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு காரணமாக அமைந்தது.

(3) 1915 ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லீம் கலவரத்துக்குக் காரணமானது.

(4) அங்கத்தவர்கள் கொள்கை அடிப்படையில் ஒற்றுமையாக செயற்பட்டனர்.

(5) இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டது.

39) 1910 - 1924 காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட சட்டசபை சீர்திருத்தங்கள்

(1) ஆளுநரின் அதிகாரங்களை அதிகரிப்பதற்குரிய ஏற்பாடுகளை நிறைவேற்றின.

(2) உத்தியோக சார்பற்றோரின் எண்ணிக்கையை கணிசமாக குறைத்தது.

(3) பிரதிநிதித்துவ ஜனநாயக முறையின் வேறு சில பண்புகளையும் அறிமுகம் செய்தன.

(4) நீதித்துறையின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தின.

(5) ஐரோப்பிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாளருக்கு அதிக பிரதிநிதித்துவத்தை வழங்கின.

➢ **40 - 46 வரையான வினாக்களுக்குரிய சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

40) 1930 களில் இலங்கையின் இடதுசாரி இயக்கம் தோற்றம் பெறுவதில் பங்களிப்புச் செய்த காரணிகளாவன

A - 1930 களின் ஆரம்பப் பகுதிகளில் ஒழுங்கமைந்த தீவிர தொழிலாளர் இயக்கத்தின் தோற்றம்

B - 1930 களில் இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடி.

C - 1930 களில் தோன்றிய சமய மறுமலர்ச்சி மற்றும் கலால் இயக்கங்கள்

D - மாக்ஸிய வாதத்தைத் தழுவிய மேற்கத்தேய கல்வியைப் பயின்ற இளம் தீவிரவாதக் குழுவின் தோற்றம்

E - அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் பின்பற்றிய தளர்ச்சியானதும் தொன்மையானதுமான கொள்கை.

(1) ABDE (2) ABCE (3) ACDE (4) BCDE (5) ABCD

41) டொனமூர் அரசாங்கத்தின் கீழிருந்த தேசாதிபதி

A - பிரித்தானிய முடியினதும் அரசாங்கத்தினதும் பிரதிநிதியாக இருந்தார்.

B - மந்திமார் சபையின் தலைவராக இருந்தார்.

C - அரசாங்கத்தின் பிரதான நிறைவேற்றாளராக இருந்தார்.

D - காலணித்துவ நாட்டின் ஏகாதிபத்தியத்தின் நலன்களின் பிரதம பாதுகாவலராக இருந்தார்.

E - சகல மசோதாக்களுக்கும் இறுதி அனுமதி வழங்கும் தனி அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

(1) ABCE (2) ABDE (3) BCDE (4) ABCD (5) ACDE

42) டொனமூர் யாப்பின் கீழ் அமைச்சர் குழு

A - 10 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

B - பிரதம செயலாளரால் தலைமை தாங்கப்பட்டது.

C - சுதேசியத் தலைவர்களையும் கொண்டமைந்தது.

D - இலங்கையின் நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருந்தது.

E - கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டது.

(1) ABDE (2) ABCE (3) BCDE (4) ABCD (5) ACDE

43) டொனமூர் யாப்பின் கீழ் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் தாக்கங்கள்

A - இடதுசாரி இயக்கம் வளர்ச்சியடைந்தமை

B - சமூக மாற்றங்கள் துரிதமடைந்தமை.

C - பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு மக்கள் பழக்கப்பட்டமை.

D - அரசியல் கட்சிகள் தோற்றம் பெற வாய்ப்பு ஏற்பட்டமை.

E - பொறுப்புக் கூறும் அரசாங்கமுறை தோற்றம் பெற்றமை.

(1) ABCE (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCD

44) சோல்பரி யாப்பின் பாராளுமன்றம்

A - உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 என வரையறுக்கப்பட்டிருந்தது.

B - ஈரவைப் பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது.

C - 29 சரத்தின் 2ம் பிரிவு பாராளுமன்றத்தின் சட்டவாக்கத்தினை வரையறை செய்தது.

D - சட்டவாக்கத்தின் இறுதி அங்கீகாரம் மகா தேசாதிபதியால் வழங்கப்பட்டது.

E - பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரத்தினை நீதிப் புனராய்வு செய்யும் அதிகாரம் நீதித்துறையிடம் காணப்பட்டது.

(1) ABDE (2) ABCD (3) ACDE (4) ABCE (5) BCDE

45) 1948 அரசியல் யாப்பின் கீழ் உண்மை நிர்வாகமானது

A - மந்திரிசபை என அழைக்கப்பட்டது.

B - சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து நாம நிர்வாகியினால் நியமிக்கப்பட்டது.

C - பிரதமரினால் தலைமை தாங்கப்பட்டது.

D - சட்டமன்றுக்கு கூட்டமாகப் பொறுப்புக் கூறவேண்டியிருந்தது.

E - சட்டமன்றில் நிறைவேற்றப்படும் ஒரு குற்றப் பிரேரணையின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படக் கூடியதாக இருந்தது.

(1) ABCE (2) ACDE (3) ABDE (4) BCDE (5) ABCD

46) 1947 சோல்பரி யாப்பின் கீழ் தேசாதிபதி

A - ஒரு நாம நிர்வாகியாகக் காணப்பட்டார்.

B - பிரதிநிதிகள் சபைக்கு 6 உறுப்பினர்களையும் செனற் சபைக்கு 15 உறுப்பினர்களையும் நியமித்தார்.

C - சட்ட மசோதாக்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குவார்.

D - பிரதமரின் விருப்பப்படி முடியினால் நியமிக்கப்படவில்லை.

E - முடியின் விருப்பப்படி தொடர்ந்தும் பதவி வகிப்பவராக இருந்தார்.

(1) ABCE (2) BCDE (3) CDEA (4) DEAB (5) ABCD

➢ **47 - 50 வரையிலான வினாக்களில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.**

47) 1ம் குடியரசு (1972) அரசியலமைப்பு தோற்றம் பெறுவதற்கான அடிப்படையான காரணங்கள்

(1) சோல்பரி யாப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் இடம்பெறாமை

(2) சோல்பரி யாப்பு தேசிய நலன்களைக் கொண்டு சுதேசிகளால் உருவாக்கப்படாமை

(3) இலங்கை அரசாங்கம் பிரித்தானிய அரசாங்க மரபுகளைப் பின்பற்ற வேண்டியிருந்தமை

(4) இலங்கை தொடர்பாக சட்டவாக்கம் செய்வதற்கு பிரித்தானியப் பாராளுமன்றம் அதிகாரம் பெற்றிருந்தமை

(5) பிரித்தானிய அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க சுதேசியத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்தமை

48) 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பு

(1) இலங்கையை ஒரு குடியரசாக்கியமை

(2) இலங்கையை ஸ்ரீலங்கா எனப் பெயரிட்டமை

(3) பிரித்தானிய மரபுகளைப் பின்பற்றத் தூண்டியமை

(4) அடிப்படை உரிமைகளை அறிமுகப்படுத்தியமை

(5) குடியரசு ஜனாதிபதியொருவரை அறிமுகப்படுத்தியமை

49) 1978 ம் ஆண்டு 2ம் குடியரசு அரசியலமைப்பு தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

(1) 1வது குடியரசு அரசியலமைப்பிலுள்ள குறைபாடுகள்

(2) 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த பெரு வெற்றி

(3) ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால இலக்கு

(4) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்பாடுகள்

(5) நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்வதிலேற்பட்ட ஆர்வம்

50) 1978ம் ஆண்டு அரசியலமைப்பு

(1) நிறைவேற்று ஜனாதிபதியை அறிமுகப்படுத்தியது.

(2) மக்கள் தீர்ப்பு முறையை அறிமுகப்படுத்தியது.

(3) விகிதாசார பிரதிநிதித்துவத்தை உள்வாங்கியது.

(4) அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது செய்யவேண்டிய ஏற்பாடுகளை உள்ளடக்கவில்லை.

(5) பிரதம மந்திரி பதவியை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது.

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC
தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | அரசியல் விஞ்ஞானம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் :....................................

- ❖ இவ்வினாத்தாள் பகுதி A, B, C என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- ❖ பகுதி A ஆனது 20 குறுவினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பூரண விடைக்கும் 01 புள்ளியும் அரைகுறை விடைக்கு $\frac{1}{2}$ புள்ளியும் வழங்கப்படும். சகல வினாக்களுக்குமான குறுவிடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனைப் பகுதி B, C ஆகியவற்றின் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
- ❖ பகுதி B யிலிருந்தும் பகுதி C யிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - A

01) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இருகூற்றுக்களும் இரு ஆட்சிமுறைகளின் அனுகூலங்களை வெளிப்படுத்துகின்றன. இவ் இரு ஆட்சிமுறைகளையும் இனங்கண்டு முறையே பெயரிடுக.

i) இந்த ஆட்சிமுறையில் இறைமை எங்கும் இயங்குவதால் நாட்டில் சீரான சட்டங்களும் நிர்வாகமும் உருவாகின்றன. சட்டங்களிலும் அதிகாரம் செலுத்துவோரிடையேயும் குழப்பங்கள் வருவதேயில்லை. அதிகார ஒருமிப்பானது வலுவுள்ள அரசு இயங்க வழி செய்கிறது. குடிமகனின் நல்லெண்ணமும் விசுவாசமும் நாட்டிற்கே உரியதாகும்.

ii) பல சிறுநாடுகள் ஒன்று சேர்ந்து இவ் ஆட்சிமுறையை உருவாக்கும் போது வலுவுள்ள ஐக்கியம் தோற்றம் பெறுகின்றது. தோன்றுகின்ற பிரச்சினைகள் விரைவில் முடிவடைகின்றன. வேறுபட்ட சூழ்நிலைகளில் மக்களின் நலன்களுக்குரியவற்றை ஆராய்வது இவ் ஆட்சியில் மட்டுமே முடியும். ஒற்றுமையும் வேற்றுமையும் இணைகின்ற பாலமாக இது காணப்படுகிறது.

(1) ........................................................................ (2) ........................................................................

02) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இருகூற்றுக்களாலும் வெளிப்படுத்தப்படும் இரு அரசியல் ஸ்தாபனங்களையும் முறையே குறிப்பிடுக.

i) இவ் அரசியல் ஸ்தாபனம் கட்புலனாகக் கூடியதும் மாறுபாடு அடையக்கூடியதுமாகும்.

ii) இவ் அரசியல் ஸ்தாபனத்தின் அடிப்படை மக்களே ஆவர். இது எல்லாவற்றுக்கும் முதன்மையாக விளங்கக்கூடிய ஒரு கழகமாகவும் கருதப்படுகிறது. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு அமைப்புமாகும்.

(1) ........................................................................ (2) ........................................................................

03) கீழே இரு அரசியல் எண்ணக் கருக்களின் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு முறையே எழுதுக.

i) ஒரு அரசுக்கு இது வரம்பற்றதாகும். பிரிக்க முடியாத தன்மை படைத்ததாகும். எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி தன்கீழ் கொண்டு வரும் தன்மை படைத்ததாகும்.

ii) சமுதாயத்தில் மக்கள் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வாழ்வதற்கு அவசியமாகின்றது. இவை திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டவையாகும். மனிதனின் தேவைகள் வளரும் போது இவையும் வளரும் பண்பு கொண்டவை.

(1) ........................................................................ (2) ........................................................................

04) அரசின் தோற்றம் பற்றிய இரு கோட்பாடுகள் தொடர்பான விளங்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினை இனங்கண்டு முறையே எழுதுக.

i) மன்னனின் ஆணைகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றை எதிர்ப்பதோ, மீறுவதோ மன்னனை நியமித்தவனுக்கு எதிராகச் செய்யும் பாவமாகும். மன்னனின் ஆணைகள் எப்படிப்பட்டவையாக இருப்பினும் அவற்றுக்கு மக்கள் ஆட்பட்டே தீர வேண்டும்.

ii) தன்னிச்சையாகத் திரிந்து விருப்பப்படி வாழ்ந்த மக்கள் தங்களுடைய பாதுகாப்புக்காகவும், உயிர்வாழச் சிரமமாய் இருந்தாலும் இவ்வுடன்பாடு மூலம் அரசினை ஏற்படுத்தினர். இதனையே மாக்கியவல்லி ''அரசு என்பது மனிதனது மிகச் சிறந்த படைப்பு'' என்றார்.

*(1)* ..............................................................................................................................

*(2)* ..............................................................................................................................

05) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு விளக்கங்களும் அரசாங்கத்தின் பணிகளை நடைமுறைப்படுத்தல், அரச அதிகாரத்தின் தன்மை என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்ட இரு அரசியல் கோட்பாடுகள் பற்றியவையாகும். அவ்விரு கோட்பாடுகளையும் இனங்கண்டு முறையே குறிப்பிடுக.

i) இதற்கு வடிவம்தந்த பெருமை பிரான்ஸ் தேசத்தின் மேதையான மொண்டெஸ்கியூவையே சாரும். இதற்கு இவர் வாழ்ந்த காலமும் அன்றைய சூழ்நிலைகளும் அடிப்படைகளாக அமைந்தன.

ii) இது அரசாங்கத்தின் சட்டமியற்றும் அதிகாரமாகும். இது நாட்டிலுள்ள எல்லா மக்களையும் உறுப்புக்களையும் கட்டுப்படுத்தும் மிகப் பெரிய சக்தி. அதிகாரத்தினால் இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

*(1)* ........................................................................ *(2)* ........................................................................

06) கீழே குறிப்பிடப்பட்டவை நேரடி ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் இருவழிமுறைகள் ஆகும். அவற்றை முறையே குறிப்பிடுக.

i) இது மசோதாக்கள் சட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் மக்களின் தீர்ப்பினை பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் மக்கள் அபிப்பிராயத்தைக் கோரும் ஒரு வழி முறையாகும். அதன்படி சட்டத்துறை நிறைவேற்றும் மசோதாக்கள் வாக்காளர்களுள் பெரும்பான்மையினரின் அங்கீகாரத்தைப் பெற்றாலேயே சட்டங்களாக ஆகும்.

ii) இது தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி தனக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையை மீறினால் அப் பிரதிநிதியைப் பதவியகற்றுவதற்கு பயன்படுத்தும் பிறிதொரு வழிமுறை யாகும். இது தொடர்பாக முன்வைக்கப்படும் ஒரு விண்ணப்பத்தைத் தேர்தல் தொகுதியிலுள்ள வாக்காளர்களுள் பெரும்பான்மையினர் அங்கீகரிப்பின் அப்பிரதிநிதியைப் பதவியிலிருந்து அகற்ற முடியும்.

*(1)* ........................................................................ *(2)* ........................................................................

07) கால்மாக்ஸ் அறிமுகப்படுத்திய மாக்சிசக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன குறிப்பிடும் சமூக அமைப்பை இனங்கண்டு எழுதுக.

i) சமூகத்தில் உற்பத்தித்திறன் மிகக் குறைவாகக்காணப்பட்டதால் உற்பத்திகளை உடனடியாக பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. இச் சமுதாய அமைப்பில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், பலமற்றோர், பலமுள்ளோர் என்ற வேறுபாடு காணப்படவில்லை.

ii) பாட்டாளிகளினால் அரசு உருவாக்கப்படும் காலத்தின் பின்னர் பொது உடமை சமுதாயத்தின் முதல் கட்டமான இது தோன்றுமெனவும் இங்கு வர்க்க வேறுபாடுகள் தளர்வடைவதனால் சுரண்டல் முறை இருக்காது.

(1) ............................................................ (2) ............................................................

08) ஐக்கிய அமெரிக்காவின் இரு சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையையும் பதவிக் காலத்தையும் குறிப்பிடுக.

(1) ............................................................ (2) ............................................................

09) "இந்தியா ஓர் அரைகுறை சமஷ்டியாகும்" ஒற்றையாட்சிப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

10) கல்டுங்சின் மோதல் முக்கோணியில் உள்ள இரண்டு விடயங்களை எழுதுக.

(1) ............................................................ (2) ............................................................

11) i) எந்த யாப்பு சீர்திருத்தத்தினால் உத்தியோகசார்புடையோரைவிட உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரிக்கப்பட்டது?

ii) உத்தியோக சார்புடையோர், உத்தியோக சார்பற்றோர் என்ற பிரிவினரை இல்லாதொழித்த யாப்பு சீர்திருத்தம் எது?

(1) ............................................................ (2) ............................................................

12) i) எந்த யாப்பு சீர்திருத்தத்தினால் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டது?

ii) எந்த யாப்பு சீர்திருத்தத்தினால் படித்த இலங்கையர் சார்பாக தமிழர் ஒருவர் தெரிவு செய்ய வாய்ப்பேற்பட்டது?

(1) ............................................................ (2) ............................................................

13) i) டொனமூர் யாப்பின் கீழ் அமைச்சர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

ii) டொனமூர் யாப்பின் கீழ் அரசுக் கழகத்தின் சபாநாயகராக நியமிக்கப்பட்டவர் யார்?

(1) ............................................................ (2) ............................................................

14) செனற்சபை உருவாக்கத்திற்கு சோல்பரிக் குழுவினர் கூறிய காரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் இரண்டு குறிப்பிடுக.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

15) சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் சோல்பரி உள்ளடக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் இரண்டு குறிப்பிடுக.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

16) இறைமையற்ற சோல்பரி பாராளுமன்றம் என்பதற்கு நீர் முன்வைக்கும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

17) இடதுசாரி இயக்கத்தின் இரு பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

18) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் 2 எழுதுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

19) சோல்பரித் திட்டத்தின் கீழ் பணி புரிந்த இறுதி ஆள்பதி நாயகத்தினதும் முதலாம் குடியரசு யாப்பின் கீழ் பணிபுரிந்த முதலாவது ஜனாதிபதியினதும் பெயர்களை முறையே குறிப்பிடுக.

(1) .................................................................... (2) ....................................................................

20) முதலாம் குடியரசு அரசியலமைப்பு அறிமுகப்படுத்திய இரு விடயங்களைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

FWC

**தரம் :- 13 (2017)** **அரசியல் விஞ்ஞானம் – II**

பகுதி - B

❖ **விரும்பிய இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

01) i) அரசறிவியலைக் கற்பதற்கான நோக்கங்களை விளக்குக.

ii) அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை சுருக்கமாக விளக்குக. ($2 \times 10 = 20$ புள்ளிகள்)

02) பின்வருவனவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

i) அரசியல் வன்முறை

ii) சிவில் சமூகம்

iii) அரசியல் கலாசாரம்

iv) அரச கொள்கை உருவாக்கம் ($2 \times 10 = 20$ புள்ளிகள்)

03) தாராண்மைவாதக் கோட்பாட்டினை பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைச் சுருக்கமாக ஆராய்க.

i) தலையிடா அரசின் பண்புகள்

ii) நலன்புரி அரசின் பண்புகள்

iii) நலன்புரி அரசின் குறைபாடுகள்

iv) குறைந்தபட்ச அரசின் பண்புகள் ($2 \times 10 = 20$ புள்ளிகள்)

04) பின்வரும் விடயங்களில் இரண்டை விளக்குக.

i) ஐக்கிய அமெரிக்காவின் செனற்சபை உலகின் 2ம் சபைகளுக்குள்ளே முதன்மையான சபையாகும்.

ii) இந்தியா ஒரு அரைகுறை சமஷ்டி நாடாகும்.

iii) சுவிஸ்லாந்தின் நிர்வாகக் குழு ஆட்சிமுறை

iv) இங்கிலாந்தின் பிரபுக்கள் சபை ($2 \times 10 = 20$ புள்ளிகள்)

## பகுதி - C

❖ **விரும்பிய இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

05) இலங்கையின் தேசிய இயக்கம் தொடர்பாக பின்வருவனவற்றுள் ஏதாவது இரண்டினை விளக்குக.

i) சமய மறுமலர்ச்சி இயக்கங்கள்

ii) தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

iii) இடதுசாரி இயக்கம்

iv) சூரியமல் இயக்கம் (2 × 10 = 20 புள்ளிகள்)

06) டொனமூர் யாப்பின் பின்வரும் ஏற்பாடுகளில் இரண்டினைப் பரிசீலிக்குக.

i) நிர்வாகக் குழுமுறைமையின் பிரதிகூலங்கள்

ii) மூன்று அரசாங்க செயலாளர்களின் வகிபங்கு

iii) சர்வசன வாக்குரிமையின் அனுகூலங்கள்

iv) தேசாதிபதியின் அதிகாரங்கள் (2 × 10 = 20 புள்ளிகள்)

07) சோல்பரி யாப்பின் கீழ் சிறுபான்மையோரின் நன்மை கருதி மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை விளக்குக. (20 புள்ளிகள்)

08) i) முதலாம் குடியரசு அரசியலமைப்பு தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விளக்குக.

ii) இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education